**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 135/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சுப்புலெட்சுமி)**
**11.9.2024**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா சொத்து சாமிநாதபிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில் சொத்து விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாமிநாதபிள்ளை பெயரில் பட்டா,சிட்டா மற்றும் அ பதிவேடு உள்ளதாக வா.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அந்த ஆவணங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தெந்த தேதியில் 1ம் பிரதிவாதியை அனுகி பாகம் கேட்டேன் என வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குடுமியான்மலையில் எலக்ட்ரிசியன் ஆக வேலை பார்த்தார் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை நிரப்புவதற்காக வா.சா.ஆ.5 ரீஜாய்ன்டர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரிகள் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு தாய்மாமன் என்ற முறையில் அனைத்து சீர்களையும் 1ம் பிரதிவாதி தான் செய்தார் என்றால் சரியல்ல. எனது பெரிய அக்காவிற்கு குழந்தை இல்லை. 2வது அக்காவிற்கு 1 மகன் உள்ளார் . அவருக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா இறந்த பிறகு எனது அக்கா மகனுக்கு திருமணம் நடந்தது. எனது பிள்ளைகளுக்கு தாய்மாமன் என்ற முறையில் 1ம் பிரதிவாதிதான் செய்யவேண்டிய சீர் வரிசைகள் செய்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். எனது தாயார் இறக்கும் போது 80 பவுன் நகைகளை வைத்துவிட்டு இறந்தார் என்றால் சரியல்ல. எவ்வளவு பவுன் இருந்தது என்றால் 10 பவுன் தான் இருந்தது. அந்த 10 பவுன் தற்போது யாரிடம் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது. அந்த பவுன் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்ற விவரம் வழக்கு தாக்கல் செய்யும்போதே தெரியும் என்றால் சரிதான். அந்த 10 பவுன் நகையை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 10 பவுன் நகையை வைத்துகொண்டு 1ம் பிரதிவாதி கொடுக்க மறுக்கிறார் என வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாயார் இறக்கும் போது 80 பவுன் நகை இருந்தது என்றும் அந்த நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றும் ஆனால் 1ம் பிரதிவாதியிடம் 10 பவுன் நகை இருப்பதாக

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தகப்பனார் சுயசம்பாத்திய சொத்தாக அனுபவம் செய்யவில்லை என்றும் திருப்பதி செட்டியாரிடம் வாடகைக்கு தான் அனுபவம் செய்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இறக்கும் வரை தாவா சொத்தை திருப்பதி செட்டியாரிடம் தரை வாடகைக்கு தான் அனுபவம் செய்து வந்தார் என்றும் உரிமையாளர் என்ற முறையில் அனுபவம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்பா இறந்த பிறகு திருப்பதி செட்டியாரிடம் தாவா சொத்தை ரூ.80க்கு 1ம் பிரதிவாதி 1986ம் வருடம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு கிரைய சொத்திற்கு 1990ம் வருடம் நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது மூத்த சகோதரி நாகம்மாள் எங்கு இறந்தார் என்றால் குடுமியான்மலையில் இறந்தார். அவர் எப்போது இறந்தார் என்றால் 2021ம் ஆண்டு இறந்தார். அவர் இறக்கும் வரை அவரை 1ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் இறக்கும் வரை அவரை 1ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்றும் ஆனால் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாகம்மாளின் கணவர் வழி சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். எனது கணவர் என்னை கொடுமைப்படுத்துவதாக 1ம் பிரதிவாதியிடம் நான் சொன்னதன் பேரில் நாகம்மாளின் கணவர் வழி வந்த சொத்துக்களை விற்று அந்த பணத்தை 1ம் பிரதிவாதி என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4ல் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை எனது வழக்குரையில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும் அதில் எனக்கு பாக உரிமை கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் உள்ள பிரச்சனை காரணமாக எனது கணவரின் தூண்டுதல் பேரில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை**